1968 மார்ச் 28] [திரு. கே. ஏ. மதியழகன்]

9,84,275.61 ஏக்கர் ஆகும். இதில் 18,662 ஏக்கர் பரப்பளவே வெள்ளத்தினாலும் புயலினாலும் பாதிக்கப்பட்டது. இம் மாவட்டத்தின் மொத்த நன்செய் நிலப்பரப்பளவுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் சேதமடைந்த பயிர் நிலங்களின் பரப்பளவு அவ்வளவு கணிசமானதல்ல. எனவே, மேற்சொன்ன விதிகளின் கீழ் கடன் தவணை வசூலை முழுவதும் நிறுத்தி வைக்குமாறு ஆணையிடும் அளவுக்குப் பயிர்கள் பரவலாகச் சேதமடைந்துள்ளன என்று சொல்ல முடியாது. ஆயினும், பெருமளவில் பயிர்ச் சேதம் ஏற்பட்ட குடியானவர்களின் மனுக்கள் அவற்றின் தகுதிகளுக்கிணங்க ஆய்வு செய்யப்பட்டு அவை குறித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ii) வடாற்காடு மாவட்டத்தில் மண் வளப் பாதுகாப்புக் கடன் கால கெடுவுக்கு முன் வசூலிக்கப்படுதல்.

திரு. எஸ். முருகையன் : வடாற்காடு மாவட்டத்தில் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்குக் கடன் வழங்கி மண் பாதுகாப்புத் திட்டத்தை நிறைவேற்றிவிட்டு பணத்தை வசூலிக்கும் காலக் கெடுவுக்கு முன்பாகவே வசூல் செய்வதில் அதிகாரிகள் துரிதப்படுத்துவதகால் அந்த வசூலை நிறுத்தி வைக்க வேண்டுமென்பதைப்பற்றி அவசரமும் பொது முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1956-ம் ஆண்டு முதல் வட ஆர்க்காடு மாவட்டத்தின் கீழ்க்கண்ட வட்டங்களில் மண்வளப் பாதுகாப்பு வேலைகள் நிறைவேற்றப்பட்டன:—

(1) வேலூர்
(2) வாலாஜா
(3) திருவண்ணாமலை
(4) போளூர்
(5) குடியாத்தம்
(6) திருப்பத்தூர்

மண்வளப் பாதுகாப்பு வேலை முடிவடைந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, அதற்காகச் செலவிடப்பட்ட தொகையில் உழவர்களின் பங்கு சமமான 20 ஆண்டுத் தவணைகளில் வசூலிக்கப்பட்டு வருகிறது. தனிப்பட்ட உழவர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய தொகையினைக் குறிக்கும் உரிமைகள், பொறுப்புகள் குறித்த பதிவேடு வேளாண்மைத் துறையினால் இறுதி செய்யப்பட்ட பிறகு அத் தொகை வருவாய்த்துறை அதிகாரிகளால் வசூலிக்கப்படுகிறது.

குடியாத்தம் தாசில்தார் தவிர ஏனைய தாசில்தார்கள் அனைவரும் செலுத்த வேண்டிய தவணைத் தொகையை வசூலிப்ப

தற்காக 1-ம் எண் கோரிக்கை விடுத்துள்ளனர். வசூலிக்கப்பட வேண்டிய காலத்திற்கு முன்னர் தவணைத் தொகையைச் செலுத்தும்படியாக எந்த நேர்விலும், உழவர்கள் கேட்கப்பட வில்லை.

1—4—1968 அன்று கட்ட வேண்டிய தவணைத் தொகையைக் குடியாத்தம் தாசில்தார் மட்டுமே தனது கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். தமிழ்நாடு 1933-ம் ஆண்டு நில மேம்பாடு உழவர்களுக்குக் கடன் வழங்குதல் (பொது) விதிகளின் திருத்தத்திற்கிணங்க ஒவ்வொரு நேர்விலும் கடன் வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரி, அசலையும் வட்டியையும், செலுத்துவதற்கு நிச்சயிக்கப்பட்ட ஆண்டுத் தவணைத் தேதி ஓர் ஆண்டில் நிலவரி செலுத்துவதற்குரிய முதல் தேதியாக இயன்றவரை இருக்க வேண்டும். அத் தேதியே அம் மாவட்டத்தில் உள்ள கடன்கள் அனைத்திற்கும் திருப்பிச் செலுத்தும் தேதியாக இருக்க வேண்டும். இத் திருத்தத்தின்படி, ஒவ்வொரு பசலியிலும் ஜனவரி, பிப்ரவரி, மார்ச் ஏப்ரல் ஆகிய கிஸ்தி மாதங்களில் நிலுவையாகச் செலுத்தப்பட வேண்டிய கடன் தவணைகள் அனைத்தும் ஜனவரி கிஸ்தியிலேயே செலுத்தப்பட வேண்டியவையாகக் கருதப்பட்டு வசூலிக்கப்பட செலுத்தப்பட வேண்டியவையாகக் கருதப்பட்டு வசூலிக்கப்பட வேண்டும். இந்த அடிப்படையில்தான் குடியாத்தம் தாசில்தார் 1—4—1968-ல் செலுத்தப்பட வேண்டிய தவணைத் தொகையைக் குறிப்பிட்டிருக்கவேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கருதுகிறார். மண்வளப்பாதுகாப்புக் கடன்கள், தக்காவிக் கடன்களின்கீழ் வாராததால் மேற்கூறிய கட்டளைகள் அந்த நேர்விற்குப் பொருந்தா என்றும், 1—4—1968 அன்று செலுத்த வேண்டிய தவணையை அது செலுத்த வேண்டிய தேதிக்குப் பின்னர் வசூலிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். 1—4—1968-ல் சேர வேண்டிய தவணையைக் குறித்து அனுப்பியுள்ள கோரிக்கைகளைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறும் குடியாத்தம் தாசில்தாருக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டளையிட்டுள்ளார். தவணைத் தொகை கட்டப்பட வேண்டிய தேதிக்கு இன்னும் சில நாட்களே உள்ளதால் தொகை ஏதேனும் ஏற்கனவே வசூலிக்கப்பட்டிருந்தால், அதனை 1—4—1968-ல் செலுத்த வேண்டிய தவணைத் தொகைக்கு முன்பணமாக வசூலிக்கப்பட்ட தொகையெனக் கருதிக் கொள்ள வேண்டும் என்று அவர் கட்டளையிட்டார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்ற இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களும் பேரவையின் அனுமதியுடன் 30—3—1968 அன்று எடுத்துக்கொள்ளப்படும்.

6. அரசினர் மசோதாக்கள்

(i) தமிழ்நாடு 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்கு (எண் 2) மசோதா

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பின்வரும் தீர்மானத்தை முன்மொழிகிறேன் :